கண்டி பல்வடிவ போக்குவரத்து முனைய அபிவிருத்தி செயற்திட்டத்தின் 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் சர்வதேச அபிவிருத்தி சங்கத்திற்குமிடையே கைச்சாத்திடப்பட்ட 6623-LK (சலுகைக் கடன்) மற்றும் 6624-LK (சலுகைக் கடன் அற்ற) SF இலக்க 2021 ஏப்ரல் 22 ஆந் திகதிய கடன் உடன்படிக்கையின் IV ஆம் உறுப்புரையின் 04.03 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி

செயற்திட்டத்தின் கடன் உடன்படிக்கையின் பிரகாரம் நகர அபிவிருத்தி, நீர் வழங்கல் மற்றும் வீடமைப்பு வசதிகள் அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்று முகராகும். எனினும் இச்செயற்திட்டத்தின் நிறைவேற்றும் பொறுப்பானது 2021 ஆம் ஆண்டில் அமைச்சரவை தீர்மானத்தின் அடிப்படையில் போக்குவரத்து பெருந்தெருக்கள் அமைச்சிற்கு மாற்றப்பட்டு வீதி அபிவிருத்தி அதிகாரசபை செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவராக மாறியது. கண்டி பல்வடிவ போக்குவரதது முனையத்தின் பொதுப் போக்குவரத்து பாவனையாளர்களுக்கான நுழைவு, செயற்திறன் மற்றும் பாதுகாப்பினை மேம்படுத்துவதே செயற்திட்டத்தின் பிரதான குறிக்கோளாகும். கண்டி பல்வடிவ போக்குவரத்து முனையத்தை (KMTT) அபிவிருத்தி செய்தல், முஆவுவு இனைச் சூழவுள்ள பகுதியில் வீதிப் பாதுகாப்பினை மேம்படுத்துதல், நிறுவன ரீதியான வலுப்படுத்தலும் இயலுமையினை கட்டியெழுப்புதலும், தற்செயலான அவசர பரிகார கூறு ஆகிய 04 கூறுகளின் கீழ் செயற்திட்ட நடவடிக்கைகள் அமுல்ப்படுத்தப்படுத்தப்படுகின்றன. கடன் உடன்படிக்கையின் பிரகாரம் செயற்திட்டத்தின் மதிப்பிட்ட மொத்த கிரயம் ரூபா 13,762 மில்லியனுக்குச் சமமான ஐ.அ.டொலர் 69.33 மில்லியனாக இருந்தது. இதில் ஐ.அ.டொலர் 47.13 மில்லியனுக்குச் சமமான எஸ்டீஆர் 64.33 மில்லியன் சலுகை நிபந்தையின் கீழ் IDA இனால் நிதியளிக்கப்படுவதுடன் ஐ.அ.டொலர் 5 மில்லியன் சலுகையற்ற நிபந்தனைகளின் கீழ் IDA இனால் நிதியளிக்கப்படும் செயற்திட்டம் அதனது நடவடிக்கைகளை 2021 மே 06 ஆந் திகதி தொடங்கியிருந்ததுடன் 2025 மே 31 ஆந் திகதியளவில் பூர்த்தி செய்வதற்கு பட்டியல்படுத்தப்பட்டிருந்ததுடன் 2027 மே 31 வரை நீட்டிக்கப்பட்டிருந்தது.

1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் 2.1 ஆம் பிரிவில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தை தவிர்த்து செயற்திட்டத்தின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது காசுப் பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான 3 வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவைபெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்

2. நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கருத்துரைகள்

2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

இல	கணக்கீட்டு குறைபாடுகள்/கணக்காய்வு அவதானிப்புக்கள்	தொகை ரூபா மில்லியன்	முகாமைத்துவத்தின் பதில்	கணக்காய்வாளரின் பரிந்துரைகள்
(அ)	மொத்த கட்டட ஆரம்ப கட்ட முற்பணமான ரூபா. 4,162.56 மில்லியனில் தொகையில் ரூபா. 2,175.62 மில்லியன்	2,175.62	ஏற்றுக்கொள்ளப்பட்டது. 2025 ஆம் நிதியாண்டு முதல் திருத்தம் செய்வதற்காக	தெரிவுசெய்யப்பட்ட நிதி அறிக்கையிடல் சட்டகத்துடன் இணங்குவதை நிதி

	தொகையானது ஒப்பந்ததாரர்களுக்கு செலுத்தப்பட்டிருந்ததுடன் ஆலோசகர்கள் இதனை அரம்ப கட்ட முற்பணங்களாக பதிவு செய்யப்படுவதற்குப் பதிலாக குறைவேலையின் கீழ் பதிவு செய்துள்ளனர். எனவே, நிதி நிலைமை கூற்றில் காட்டப்பட்டுள்ள குறைவேலையின் மீதி இதே அளவினால் மிகையாக காட்டப்பட்டடுள்ளது.		குறித்துக்கொள்ளப்பட்டது.	கூற்றுக்களில் கையொப்பமிடுவதற்கு முன்னர் கணக்காளர் உறுதி செய்தல் வேண்டும்.
(ஆ)	கண்டி பல்வடிவ போக்குவரத்து முனையத்தின் வடிவமைப்பு மற்றும் நிர்மானத்திற்கான ஒப்பந்தத்துடன் தொடர்புடைய ரூபா.190.62 மில்லியன் பிடிகாசுத் தொகையினை செலுத்த வேண்டிய மீதியாகவும் குறைவேலையாகவும் கணக்குவைத்திருக்கவில்லை. இதன் விளைவாக, நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள குறை வேலை மற்றும் பிடி காசுத்தொகை இதே தொகையினால் குறைத்து மதிப்பிடப்பட்டுள்ளது.	190.62	ஏற்றுக்கொள்ளப்பட்டது. 2025 ஆம் நிதியாண்டு முதல் திருத்தம் செய்வதற்காக குறித்துக்கொள்ளப்பட்டது.	தெரிவுசெய்யப்பட்ட நிதி அறிக்கையிடல் சட்டகத்துடன் இணங்குவதை நிதி கூற்றுக்களில் கையொப்பமிடுவதற்கு முன்னர் கணக்காளர் உறுதி செய்தல் வேண்டும்.
(இ)	இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 01 இன் 88, 89 ஆம் பந்திகளின் பிரகாரம், நிதி நிலைமை கூற்றினை விளங்கிக்கொள்வதற்காக அத்தகைய விளக்கத்திற்கு பொருத்தமானதாக தலைப்புகள் மற்றும் துணை மீதித் தொகைகள் நிதி நிலைமை கூற்றின் முகப்பில் உள்ளடக்கப்படல் வேண்டும். எவ்வாறாயினும், அதற்கு முரணாக ரூபா.5,104.39 மில்லியன் தொகையான குறை	5,104.39	ஏற்றுக்கொள்ளப்பட்டது. 2025 ஆம் நிதியாண்டு முதல் திருத்தம் செய்வதற்காக குறித்துக்கொள்ளப்பட்டது.	தெரிவுசெய்யப்பட்ட நிதி அறிக்கையிடல் சட்டகத்துடன் இணங்குவதை நிதி கூற்றுக்களில் கையொப்பமிடுவதற்கு முன்னர் கணக்காளர் உறுதி செய்தல் வேண்டும்.

	வேலைகள் கூறு ரீதியாக வகைப்படுத்தப்படுவதற்குப் பதிலாக நிதி நிலைமை கூற்றின் முகப்பில் பதிவு செய்யப்பட்டிருந்தன.			
(ஈ)	தந்திரோபாய நகர அபிவிருத்தி திட்டத்தினால் (SCDP) KMTT திட்டத்திற்காக 2022 ஆம் ஆண்டு வரையிலும் ரூபா.889.34 மில்லியன் செலுத்தப்பட்டிருந்த போதிலும் PMU ஆனது மேற்குறிப்பிட்ட கொடுப்பனவுகள் தொடர்பான விபரங்களை முந்தைய செயற்திட்டத்திலிருந்து பெற்றுக்கொண்டிருக்கவில்லை மற்றும் KMTT திட்டத்தின் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தியிருக்கவில்லை.	889.34	உடன்படவில்லை. தந்திரோபாய நகர அபிவிருத்தி திட்டத்தினால் (SCDP) மேற்கொள்ளப்பட்ட இந்தத் செயற்திட்டம் தொடர்பான கொடுக்கல் வாங்கல்கள் குறித்த விபரங்கள் எதனையும் KMTT செயற்திட்டத்திற்கு இதுவரை கிடைக்கப் பெற்றிருக்கவில்லை , எனவே நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்த முடியவில்லை.	தெரிவுசெய்யப்பட்ட நிதி அறிக்கையிடல் சட்டகத்துடன் இணங்குவதை நிதி கூற்றுக்களில் கையொப்பமிடுவதற்கு முன்னர் கணக்காளர் உறுதி செய்தல் வேண்டும்.
(உ)	இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 02 இன் 39 ஆம் பந்தியின் பிரகாரம், வெளிநாட்டு நாணய மாற்று விகிதங்களில் ஏற்படும் மாற்றங்களால் ஏற்படும் தேறாத ஆதாயங்கள் மற்றும் இழப்புகள் என்பன காசுப்பாய்ச்சல்கள் இல்லை. எவ்வாறாயினும், ரூபா.6.67 மில்லியன் தொகையான அந்நியச் செலாவணி ஆதாயம் இதற்கமைவாக காசுப்பாய்ச்சல் கூற்றில் சீராக்கப்பட்டிருக்கவில்லை.	6.67	உடன்படவில்லை. இந்த நாணயமாற்று ஆதாயம் நிதியீட்ட நடவடிக்கைகளிலிருந்து பெறப்பட்டதன் காரணமாக இது நிதியீட்ட நடவடிக்கைகளின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.	இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களை பின்பற்றுதல் வேண்டும்.

(ஊ)	இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 05 இன் 43(அ) ஆம் பந்தியின் பிரகாரம், நிதி நிலைமை கூற்றின் திகதில் இறுதி அந்நிய செலாவணி விகிதத்தில் சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் மாற்றம் செய்யப்படல் வேண்டும். எவ்வாறாயினும், செயற்திட்டத்தின் வெளிநாட்டுக் கடனுடன் தொடர்புடைய ஐக்கிய அமெரிக்க டொலர் 1.13 மில்லியனுக்கு சமனான ரூபா. 421.67 மில்லியன் தொகையான ஆரம்ப கட்ட முற்பணம் மற்றும பகுதியளவாக சீராக்கம் செய்யப்பட்ட ரூபா. 180.53 மில்லியன் தொகை என்பன நிதிநிலை கூற்றுக்களில் கணக்கிடப்பட்டிருக்கவில்லை அல்லது வெளியிடப்படுத்தப் பட்டிருக்கவில்லை.	602.2	உடன்படவில்லை. அரச கணக்குகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் 2024 பெப்ரவரி 22 ஆம் திகதியிடப்பட்ட SA/FR8Policy/Asset/ ஆம் இலக்க கடிதம் மூலம் வழங்கிய அறிவுறுத்தல்களின் பிரகாரம் செயற்திட்ட நிதிக்கூற்றுக்களின் பகுதியளவான முரணினை சீராக்கம் செய்வது அவசியமற்றதாகும்.	இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களை பின்பற்றுதல் வேண்டும்.
(எ)	இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 08 இன் 100 ஆம் பந்தியின் பிரகாரம் அறிக்கையிடும் திகதியில் உள்ளவாறான நிகழத்தக்க பொறுப்பின் ஒவ்வொரு வகுப்பையும் நிகழத்தக்க பொறுப்பின் தன்மை பற்றிய சுருக்கமான விளக்கத்துடன் நடைமுறைக்கு சாத்தியமான இடங்களில் வெளிப்படுத்துதல் வேண்டும். எவ்வாறாயினும், மீளாய்வாண்டின் போது ஒப்பந்தக்காரரால் சமர்ப்பிக்கப்பட்ட வேறுபாட்டை கொண்ட ரூபா.3.24 மில்லியன் தொகையான ஆறு (06) கட்டளைகள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.	3.24	ஏற்றுக்கொள்ளப்பட்டது. செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களை நிறைவு செய்யும் போது ஒப்பந்தப் பொறியாளரால் இது சான்றுப் படுத்தப்பட்டிருக்கவில்லை. இந்த வெளிப்படுத்தலானது நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புகளில் இருந்து தவறுதலாக விடுபட்டிருந்தது.	இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களை பின்பற்றுதல் வேண்டும்.

(ஏ)	நிதி நிலைமை கூற்றின் பிரகாரம் KMTT இன் ஒப்பந்ததாரர் மற்றும் ஆலோசகருக்கு செலுத்த வேண்டிய நிலுவைகள் ரூபா. 744.21 மில்லியன் ஆகும். எவ்வாறாயினும், நிலுவையில் உள்ள இடைக்கால கொடுப்பனவு சான்றிதழ்களின் (IPC) பிரகாரம், அது ரூபா. 732.61 மில்லியனாக இருந்தது. எனவே, இரண்டு நிலுவைத் மீதிகளுக்கிடையே இடையே ரூபா.11.6 மில்லியன் வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது.	11.6	மிகையான மதிப்பீடு அல்லது குறைவான மதிப்பீடு என்பன அடுத்த ஆண்டு நிதிக்கூற்றுக்களில் சீராக்கம் செய்யப்படும்.	நிலுவை மீதிகள் ஏனைய தரப்பினர்களின் பேரேட்டு மீதிகளுடன் இணங்குகின்றனவா என்று நிதிக்கூற்றுக்களில் கையொப்பமிடுவதற்கு முன்னர் கணக்காளர் உறுதி செய்தல் வேண்டும்.
(ஐ)	நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் செயல்பாட்டில் குறை ஐவலை மீதி ரூபா.5,104.39 மில்லியனாக இருந்தது மற்றும் நிதிக்கூற்றுக்களின் குறிப்பு எண் - 05 இன் பிரகாரம், இது ரூபா.5,272.62 மில்லியனாக இருந்தது. எனவே, இரண்டு மீதிகளுக்கும் இடையே ரூபா.168.23 மில்லியன் வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது.	168.23	ஏற்றுக்கொள்ளப்பட்டது. எதிர்கால நிதிக்கூற்றுக்களில் இதுபோன்ற வழுக்களை தவிர்ப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும்.	மீதிகள் ஏனைய தொடர்புடைய அட்டவணைகளுடன் இணங்குகின்றனவா என்று நிதிக்கூற்றுக்களில் கையொப்பமிடுவதற்கு முன்னர் கணக்காளர் உறுதி செய்தல் வேண்டும்.

2.2 சட்டங்கள், விதிகள், மற்றும் பிரமாணங்களுடனான இணக்கமின்மைகள்

இல	சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுக்கான தொடர்பு	இணக்கமின்மை/ கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் பதில்	கணக்காய்வாளரின் பரிந்துரைகள்
(அ)	2009 ஏப்ரல் 16 ஆம் திகதியிடப்பட்ட 9/2009 ஆம்	அனைத்து அரச நிறுவனங்களிலும் உள்ள அனைத்து அரசு	ஏற்றுக்கொள்ளப்பட்டது. கை விரல் அடையாளப் பதிவு	புதிய கை விரல் அடையாளப் பதிவு இயந்திரங்களை

	இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் பிரகாரம்	ஊழியர்களின் உள்வருகை மற்றும் வெளிச்செல்லல் நேரங்கள் கை விரல் அடையாளப் பதிவு இயந்திரங்கள் மூலம் உறுதிப்படுத்தப்படல் வேண்டும். மேலும், வழமையான வேலை நேரத்திற்கு அப்பால் மேற்கொள்ளப்படும் மேலதிக நேர மற்றும் விடுமுறை கொடுப்பனவு முதலிய கொடுப்பனவுகளை செலுத்துவதற்கு உள்வருகை மற்றும் வெளிச்செல்லல் நேரத்தினை அடிப்படையாகப் பயன்படுத்தினால், கை விரல் அடையாளப் பதிவு இயந்திரங்கள் மூலம் உள்வருகை மற்றும் வெளிச்செல்லல் என்பன உறுதிப்படுத்தப்படல் வேண்டும். எனினும், மேற்குறிப்பிட்ட சுற்றறிக்கைக்கு மாறாக, கை விரல் அடையாளப் பதிவு இயந்திரங்கள் மூலம் உள்வருகை மற்றும் வெளிச்செல்லல் என்பன உறுதிப்படுத்தாமல் மேலதிக கொடுப்பனவாக ரூ.3.2 மில்லியன் செலுத்தப்பட்டுள்ளது.	இயந்திரங்களை நிறுவுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. எவ்வாறாயினும், வருகைப் பதிவேடு, அசைவுப் பதிவேடு மற்றும் ஓட்டப் பதிவேடு பரிசோதித்த பின்னரே மேலதிக நேர மற்றும் விடுமுறை கொடுப்பனவுகள் வழங்கப்படுகின்றன.	நிறுவுவதற்கு செயற்திட்ட பணிப்பாளர் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் மற்றும் மேலதிக நேர (OT) மற்றும் ஏனைய கொடுப்பனவுகள் சுற்றறிக்கையின் அறிவுறுத்தலுக்கு இணங்குவதை அவற்றிற்கு அங்கீகாரம் மற்றும் சான்றுப்படுத்தல் செய்வதற்கு முன்னர் உறுதிப்படுத்துதல் வேண்டும்.
(ஆ)	2019 மார்ச் 15, ஆம் திகதியிடப்பட்ட 01/2019 ஆம் இலக்க முகாமைத்துவ சுற்றறிக்கையின் இன் துணைப் பிரிவு	செயற்திட்ட வழிகாட்டுதல் குழுவானது குறைந்தது இரண்டு மாதங்களுக்கு ஒரு முறையாவது கூடுவதை வரிசை அமைச்சகத்தின் செயலாளர் உறுதி செய்தல் வேண்டும் மற்றும்	ஏற்றுக்கொள்ளப்பட்டது. 2024 ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தல்கள் மற்றும் அதன் விளைவாக ஏற்பட்ட நிர்வாக கால தாமதங்கள் காரணமாக	தொடர்புடைய சுற்றறிக்கையின் பிரகாரம் வழிகாட்டுதல் குழுக் கூட்டம் நடைபெறுவதை பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தர்

	9.3 இன் பிரகாரம்	அதன் மூலம் அத்தகைய முறைமையின் செயல்திறனைக் கண்காணிப்பதற்கு செயற்திட்டம் அவ்வப்போது மீளாய்வுகளை மேற்கொள்ள வேண்டும். எவ்வாறாயினும், மீளாய்வாண்டில் ஒரே ஒரு வழிகாட்டுதல் குழு கூட்டங்கள் மாத்திரமே நடத்தப்பட்டிருந்தது மற்றும் இது செயற்திட்ட நடவடிக்கைகளில் பாதகமான தாக்கத்தினை ஏற்படுத்தலாம்.	வழமையான கூட்ட அட்டவணையை பேணுவது சாத்தியமற்றதாக இருந்தது. தற்போது இது சரிசெய்யப்பட்டுள்ளது.	உறுதி செய்ய வேண்டும்.
(இ)	2018 யூலை 16 ஆம் திகதியிடப்பட்ட 3/2018 ஆம் இலக்க தேசிய பாதீட்டு சுற்றறிக்கையின் பிரிவு 4 இன் பிரகாரம்	அரச முகவர்கள் வாகனங்களை வாடகைக்கு அமர்த்தும் போது பொது திறைசேரியிடமிருந்த அங்கீகாரத்தினை பெற்றுக் கொள்ளுதல் வேண்டும். எவ்வாறாயினும், செயற்பாட்டு குத்தகை பயன்படுத்துதல் மற்றும் மீள வழங்குதல்) முறையில் 2024 ஆம் ஆண்டில் 3 மாதங்களுக்கு 03 வாகனங்கள் PMU இற்கு பெறப்பட்டு பொது திறைசேரியிடமிருந்த அங்கீகாரத்தினை பெற்றுக் கொள்ளாமல் ரூபா.2.42 மில்லியன் செலுத்தப்பட்டது.	ஏற்றுக்கொள்ளப்பட்டது. சிறப்புத் திட்டங்களுக்கு 2018 யூலை 16 ஆம் திகதியிடப்பட்ட 3/2018 ஆம் இலக்க தேசிய பாதீட்டு சுற்றறிக்கையானது அமுல்படுத்தப் பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும், 2024 ஆம் ஆண்டின் 2வது காலாண்டிலிருந்து வாகனங்கள் செயற்திட்டத்தினால் வாடகைக்கு அமர்த்தப் பட்டிருக்கவில்லை.	தேசிய பாதீட்டு சுற்றறிக்கையின் அறிவுறுத்தலை மீறும் பொறுப்பான உத்தியோகத்தர்கள் மீது பிரதம நிறைவேற்று உத்தியோகத்தர் ஒழுங்காற்று நடவடிக்கையினை மேற்கொள்ளுதல வேண்டும்.

3. பௌதீக செயலாற்றல்

3.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக செயல் முன்னேற்றம்

இல	நடவடிக்கை	2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு		தாமதம் / கணக்காய்வு விடயம்	தாமதத்திற்கான காரணம்	முகாமைத்துவத்தின் பதில்	கணக்காய்வாளரின் பரிந்துரைகள்
		எதிர்பார்க்கப்பட்ட பௌதீக செயல் முன்னேற்றம் %	அடையப் பெற்ற செயலாற்றல் %				
(அ)	KMTT இன் கட்டமைப்பு மற்றும் கட்டடக் கலை கூறுகளுக்கான ஆரம்ப மற்றும் விரிவான வடிவமைப்பு.	100	77	அங்கீகரிக்கப்பட்ட நிகழ்ச்சித் திட்டத்தின் பிரகாரம் ,கட்டமைப்பு மற்றும் கட்டடக்கலை கூறுகளுக்கான ஆரம்ப மற்றும் விரிவான வடிவமைப்பு 2025 சனவரி 20 அன்று பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டது. எவ்வாறாயினும், விரிவான வடிவமைப்பு 2025 யூன் 06 வரையிலும் நிறைவு செய்யப் படவில்லை. ஒப்பந்த நிபந்தனையின் பிரகாரம் கால நீடிப்பு மற்றும் கிரய மாற்றத்தை குறைப்பதற்குத் தேவையான நடவடிக்கையினை PMU எடுத்திருக் கவில்லை.	விரிவான வடிவமைப்பிற்கான கணிக்க முடியாத அளவிலான விசாரணை காரணமாக வடிவமைப்பில் கால தாமதம் ஏற்பட்டுள்ளது.	உடன்படவில்லை. விரிவான வடிவமைப்பிற்கான கணிக்க முடியாத அளவிலான விசாரணை காரணமாக வடிவமைப்பில் கால தாமதம் ஏற்பட்டுள்ளது. ஒப்பந்தத்தின் பிரகாரம், கால தாமதங்களைக் குறைப்பதற்கான சரியான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு ஆலோசகர் பல நடவடிக்கைகளை எடுத்துள்ளார், மற்றும் PMU இந்த செயல் முறையினை வாரந்தோறும் உன்னிப்பாகக் கண்காணித்து வருகின்றது.	ஏற்றுக் கொள்ளப்பட்ட காலப் பகுதிக்குள் செயற்திட்டத்தை நிறைவு செய்வதற்கு பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தர் PMU இற்கு அறிவுறுத்துதல் வேண்டும்.

(ஆ)	KMTT கட்டிடத்தின் நிலத்தடியிலுள்ள நீளமான துண்கள்	100	62	முனையக் கட்டிடத்தின் நிலத்தடியிலுள்ள நீளமான துண்களின் நிர்மாண வேலைகள் 2025 யூன் 01 அன்று நிறைவு செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், 2025 யூன் 06 அன்று தளத்தைப் பார்வையிட்டபோது இந்தப் வேலைகளின் உண்மையான முன்னேற்றம் 62 சதவீதமாக காணப்பட்டது. ஒப்பந்த நிபந்தனையின் பிரகாரம் கால நீடிப்பு மற்றும் கிரய மாற்றத்தை குறைப்பதற்குத் தேவையான நடவடிக்கையினை PMU எடுத்திருக்கவில்லை.	கணிக்க முடியாத தளம் / மண்ணின் தன்மைகளின் பிரகாரம், நிலத்தடியிலுள்ள நீளமான துண்களின் நிர்மானத்திற்கு எதிர்பார்த்ததை விட அதிக காலம் எடுத்தது.	உடன்படவில்லை. கணிக்க முடியாத தளம் / மண்ணின் தன்மைகளின் பிரகாரம், நிலத்தடியிலுள்ள நீளமான துண்களின் நிர்மானத்திற்கு எதிர்பார்த்ததை விட அதிக காலம் எடுத்தது.	திட்டத்தை திட்டமிடப்பட்ட காலப்பகுதிக்குள் பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.
(இ)	ஆர்கேட் கட்டிடத்தின் அடித்தள வேலைகள்.	100	0	அங்கீகரிக்கப்பட்ட வேலை நிகழ்ச்சித் திட்டத்தின பிரகாரம், ஆர்கேட் கட்டிடத்தின் அடித்தளப் பணிகள் 2024 ஒக்தோபர் 31 அன்று ஆரம்பிக்கப்பட்டு 2025 பெப்ரவரி 24 இற்குள் பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டது. எவ்வாறாயினும், அடித்தளப் பணிகள் 2025 யூன் 06	காணியினை ஒப்படைப்பதற்கு SLR & MOTH என்பவற்றுக்கு இடையேயான MOU இன் பிரகாரம் SLR நடவடிக்கை எடுக்கவில்லை.	உடன்படவில்லை. SLR & MOTH என்பவற்றுக்கு இடையேயான MOU இன் பிரகாரம் காணியினை ஒப்படைப்பதற்கு SLR நடவடிக்கை எடுக்கவில்லை.	செயற்திட்டத்தை திட்டமிடப்பட்ட காலப்பகுதிக்குள் பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

வரையிலும் கூட பூர்த்தி செய்யப் படவில்லை மற்றும் ஒப்பந்த நிபந்தனையின் பிரகாரம் கால நீடிப்பு மற்றும் கிரய மாற்றத்தை குறைப்பதற்குத் தேவையான நடவடிக்கையினை PMU எடுத்திருக் கவில்லை என்று அவதானிக்கப்பட்டது.

3.2 ஒப்பந்த நிர்வாகம்

	கணக்காய்வு விடயம்	முகாமைத்துவத்தின் பதில்	கணக்காய்வாளரின் பரிந்துரைகள்
(அ)	ஒப்பந்தத்தின் குறிப்பிட்ட நிபந்தனையின் 14.6.2 ஆம் இலக்க ஏற்பாட்டின் பிரகாரம், வழமையாக ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒப்பந்தத் தொகையிலிருந்து (அனுமான தொகையினை கழித்த பின்) வேலை நிறைவடையும் வரையான கோரப்பட்ட பட்டியல் தொகையானது 2 சதவீதமாக காணப்படும் போது ஒப்பந்ததாரர் இடைக்கால கொடுப்பனவுக்கான விண்ணப்பங்களை (IPA) சமர்ப்பிக்க வேண்டும். இதற்கு மேலதிகமாக, கடன் ஒப்பந்தத்தின் பிரிவு III இன் 3.01 ஆம் விதிமுறைகளின் பிரகாரம் செலுத்தப்படாத நிலுவைகளுக்கான உறுதிமொழி கட்டணம் போன்ற தேவையற்ற நிதி கட்டணங்களைத் தவிர்ப்பதற்கு திறமையான நிதி பயன்பாடு அவசியமாகும். எவ்வாறாயினும் , ஒப்பந்தத்தின் பிரிவு 14.3 மற்றும் 14.6.2 இல் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனையைப்	உடன்படவில்லை. சில உருப்படிகள் விலைமனுவில் இருந்து விடுபட்டுள்ளன் மற்றும் ‘மெடாஎலா’ வில் உள்ள எதிர்பாராத மாற்றங்கள் நிர்மானத் தள நிபந்தனைகளின பிரகாரம் வடிவமைப்பில் இணைக்கப்பட வேண்டும். எனவே, ஒப்பந்ததாரர் ஆரம்பத்தில் இந்தப் உருப்படிகளுக்கு செலவு செய்யவில்லை இதனால் அவற்றின் நிதி பயன்பாடு உண்மையான வேலையைப் பிரதிபலிக்கவில்லை. உலக வங்கியால் வெளியிடப்பட்ட வாடிக்கையாளர் இணைப்பு அறிக்கைகளில் இதுவரை எந்த உறுதிமொழி கட்டணங்களும் காட்டப்படவில்லை.	நிதி ஒதுக்கீட்டுத் திட்டத்துடன் இணைந்ததாக செயற்திட்டத்தின் பௌதீக செயல் முன்னேற்றத்தை அடைந்து கொள்ளுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

	பின்பற்றாமல் 12 இடைக்கால கட்டண விண்ணப்பங்களை (IPA) செயற்திட்டம் ஏற்றுக்கொண்டுள்ளது மற்றும் இது நன்கொடையாளர் நிதியின் தாமதமான பயன்பாட்டைப் பாதிக்கும் மற்றும் இதன் காரணமாக வழங்கப்படாத மீதிகள் மற்றும் உறுதிமொழி கட்டணங்களும் அதிகரிக்கும்.		
(ஆ)	கடன் ஒப்பந்தத்தின் 02 ஆம் இலக்க அட்டவணையின் பிரிவு “இ” இன் பிரகாரம், கடன் அமுலுக்கு வரும் திகதிக்கு முன்னதாகவோ அல்லது அதற்குப் பின்னரான 6 மாதங்களுக்குள் செயற்திட்டத்தின் நிர்வாக கையேடு தயாரிக்கப்பட்டு இறுதி செய்யப்படல் வேண்டும். எவ்வாறாயினும், கடன் அமுலுக்கு வரும் திகதியிலிருந்து 4 ஆண்டுகளுக்குப் பின்னரும் கூட இந்த செயதிட்டத்திற்கான செயற்திட்ட நிர்வாக கையேடு (PAM) தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. எனவே, ஒருங்கிணைந்த குறிப்பு ஆவணம் இல்லாத நிலையில், முக்கியமான நிர்வாக நடைமுறைகள், அறிக்கையிடல் வடிவங்கள், இடர் முகாமைத்துவ கட்டமைப்புகள் மற்றும் பொறுப்புக்கூறல் கட்டமைப்புகளை கோடிட்டுக் காட்டுவது செயற்திட்ட ஒருங்கிணைப்பை எதிர்மறையாக பாதித்ததுடன் தீர்மானமெடுப்பதில் தாமதம் ஏற்பட்டது மற்றும் நன்கொடையாளர் மற்றும் அரசாங்க நடைமுறைகளுடனான இணக்கப்பாட்டு இடரையும் அதிகரித்தது.	உடன்படவில்லை. KMTT அன் உரிமைத்துவம் தொடர்பான சிக்கல்கள் காரணமாக, இது சில மாதங்களாக தாமதமாகி வருகிறது. தற்போது செயல்பாட்டு கையேடு அறிக்கையினை உலக வங்கியின் அங்கீகாரத்திற்காக PMU அனுப்பியுள்ளது மற்றும் இந்த திட்டம் தொடர்பான உலக வங்கியின் பெறுகை நிபுணரிடமிருந்து வாய்மொழி மூலமான அங்கீகாரம் கிடைக்கப்பெற்றுள்ளது.	கடன் ஒப்பந்தத்தின் பிரகாரம் செயற்திட்டத்தின் செயல்பாட்டு கையேட்டினைத் தயாரிப்பதற்கு பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தர் PMU இற்கு அறிவுறுத்துதல் வேண்டும்.
(இ)	2024 திசம்பர் 2 முதல் 13 வரையிலான காலப்பகுதியில் உலக வங்கியால் மேற்கொள்ளப்பட்ட பணி நடவடிக்கையின் பிரகாரம், KMTT இன் உரிமைத்துவம் மற்றும் செயல்பாட்டு மாதிரியை அடையாளம் காண்பதற்கு நிதி	உடன்படவில்லை. பங்குதாரர்கள் மற்றும் திறைசேரியின் ஒத்துழைப்புடன் KMTT இற்கான உரிமை மாதிரி மற்றும் செயல்பாட்டு மாதிரியை இறுதி செய்யும் பணியில்	KMTT இன் உரிமைத்துவம் மற்றும் செயல்பாட்டு மாதிரியினை இறுதி செய்வதற்கு தேவையான நடவடிக்கையினை பிரதம

	அமைச்சுடன் கலந்துரையாடலைத் ஆரம்பிக்குமாறு வரிசை அமைச்சின் செயலாளரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டது. எவ்வாறாயினும் , அதற்கமைவாக வரிசை அமைச்சரின் செயலாளர் நடவடிக்கையினை எடுக்கவில்லை. இந்த காலதாமதமானது இந்தத் செயற்திட்டத்தின் கீழ் உள்ள “நிறுவன வலுப்படுத்துதல் மற்றும் திறன் மேம்பாடு” என்று பெயரிடப்பட்ட 03 ஆவது கூறிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட ஐக்கிய அமெரிக்க டொலர் 4 மில்லியனினை செயல்படுத்துதையும் பயன்படுத்துவதினையும் பாதிக்கும்.	அமைச்சு ஈடுபட்டுள்ளது. எவ்வாறாயினும், ஏற்கனவே உள்ள KMTT இன் சிவில் பணிகள் மற்றும் பேருந்து இயக்க ஒப்பந்தங்களுக்கு அவ் ஒப்பந்தங்களை வழங்குவதில் உள்ள நிதிப் பற்றாக்குறை காரணமாக ஒதுக்கீடு செய்யப்பட்ட ஐக்கிய அமெரிக்க டொலர் 4 மில்லியனானது அவற்றிற்கு மாற்றப்பட்டுள்ளன.	கணக்கீட்டு உத்தியோகத்தர் மேற்கொள்ள வேண்டும்.
(ஈ)	இலங்கை புகையிரத திணைக்களத்தால் பயன்படுத்தப்பட்ட 1.9216 ஹெக்டேர் பரப்பளவு கொண்ட காணியொன்று KMTT செயற்திட்டத்தின் நிர்மாணத்திற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டு வழங்கப்பட்டது. மேலும், கையகப்படுத்தப்பட்ட காணியில் உள்ள கட்டிடத்தை இடித்தமைக்காக GOSL நிதியளிப்பின் கீழ் ஏழு மாடி கட்டிடமொன்றை நிர்மானிப்பதற்கு செயற்திட்டம் உடன்பட்டுள்ளது. செயற்திட்டத்தின் 2024 ஆம் ஆண்டுக்கான பெறுகை திட்டத்தின் பிரகாரம், ஏழு மாடி கட்டிடத்திற்கான நிர்மாண ஒப்பந்தம் 2024 யூலை 05 ஆம் திகதிக்குள் வழங்குவதற்கு திட்டமிடப்பட்டது, ஆனால், ஒரு வருடம் கழித்தும் 2025 மே மாதம் இறுதி வரையிலும் கூட ஒப்பந்தம் வழங்கப்படவில்லை.	நிதி உதவி உலக வங்கியிடமிருந்தா அல்லது அரசிடமிருந்தா என்பது பற்றி 2024 ஆம் ஆண்டு வரையிலும் தீர்மானம் மேற்கொள்ளப்படவில்லை. எனவே, 2024 ஆம் ஆண்டு வரை கால தாமதம் ஏற்பட்டது. தற்போது அரசிடமிருந்து இதற்கான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது மற்றும் பெறுகை செயல்முறை இறுதிக்கட்டத்தில் உள்ளது.	கடன் காலத்திற்குள் வேலையினை நிறைவு செய்வதற்கான கால இலக்கு உள்ளடங்கலான செயல் நடவடிக்கை திட்டம், பெறுகை திட்டம் ஆகியவற்றை தயாரித்து பெற்றுக்கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகள் செயற்திட்ட பணிப்பாளரினால் மேற்கொள்ளப்படல் வேண்டும்.
(உ)	இலங்கை அரசாங்கத்தின் கோரிக்கையின் பேரில் ஏனைய கடன் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை மாற்றம் செய்யாமல் உலக வங்கியால் செயற்திட்டத்தை நிறைவு செய்யும் காலம் 2025 மே 31 முதல் 2027 மே 30 வரை நீடிக்கப்பட்டுள்ளது. இதன்	உடன்படவில்லை. இந்த செயற்திட்டத்திற்கு SCDP இன் கீழ் 2019 ஆம் ஆண்டு நிதி ஒதுக்கீடு மேற்கொள்ளப்பட்டது. கோவிட் 19 தொற்றுநோய் மற்றும் நாட்டில் ஏற்பட்ட நிதி	கடன் நிதியானது வினைத்திறனாக பயன்படுத்தப்படல் வேண்டும்

	விளைவாக, கடனை மீளச் செலுத்துதல் 2025 முதல் 2045 ஆம் ஆண்டிற்குள் ஆரம்பிக்கப்படல் வேண்டும். முதலீட்டிலிருந்து எவ்வித நன்மைகளையும் பெற்றுக்கொள்ளாமல் அரசாங்கம் கடன் தவணையினை செலுத்த வேண்டியிருந்தமை அவதானிக்கப்பட்டது. மேற்கூறிய பாதகத்தின் தாக்கத்தை அரசாங்கத்திற்குத் தெரிவிக்கவும், அதைத் தணிப்பதற்கு நடவடிக்கை எடுக்கவும் PMU இனால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	நெருக்கடிகள் காரணமாக இது 2022 வரை தாமதமாகியுள்ளது. இந்த செயற்திட்டத்தை வழங்குவதற்கான செயல்முறையை விரைவுபடுத்துவதற்காக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு வசதிகள் அமைச்சிலிருந்து நெடுஞ்சாலை அமைச்சிற்கு செயற்திட்டத்தை மாற்றுவதற்கு அரசாங்கம் தீர்மானம் எடுத்துள்ளது.	
(ஊ)	குறைபாட்டுக்கான பொறுப்பு காலப்பகுதியின் போது ரூபா.362 மில்லியன் செலவாகும் என்று உலக வங்கி மிஷன் அறிக்கையின் பிரகாரம் மதிப்பிடப்பட்டுள்ளது மற்றும் இந்த செலவினை இலங்கை அரசாங்கம் பொறுப்பேற்க வேண்டும். செயற்திட்ட மதிப்பீட்டு ஆவணத்தின் பிரகாரம் மீளாய்வு செய்யப்பட்டதில் 2021 முதல் 2024 வரை KMMT இன் நிர்மாணப் பணிகளைத் ஆரம்பிப்பதில் ஏற்பட்ட காலதாமதம் காரணமாக செயற்திட்டச் கிரயத்திலிருந்து நிகர நன்மைகள் உள்ளடங்கலான 12.26 சதவீத நிகர நன்மைகளைப் பெற்றுக்கொள்வதனை இது முக்கியமாகப் பாதித்திருந்தது என்று அவதானிக்கப்பட்டது. மேலும் இந்த செயற்திட்டச் கிரயத்தை மீறுவதற்கும் எதிர்பார்க்கப்படும் முடிவைப் பெறுவதில் தாமதம் ஏற்படுவதற்கும் இந்த மேலதிக கிரயத்தை ஈடு செய்வதற்கான மாற்று நிதி ஏற்பாடுகளை மதிப்பிடுவதற்கும் இது காரணமாக அமைந்தது.	ஏற்றுக்கொள்ளப்பட்டது. இது 2024 ஆம் ஆண்டில் அமைச்சரவைக்கு தெரிவிக்கப்பட்டு அமைச்சரவை தீர்மானம் வழங்கப்பட்டுள்ளது.	செயதிட்டத்தினால் முறையான செயல் நடவடிக்கை திட்டம் தயாரிக்கப்பட்டு அதற்கமைவாக பாதீடு மற்றும் பொறுப்புக்கள் நிர்ணயிக்கப்படல் வேண்டும்.
(எ)	KMTT நுழைவாயிலில் முன்மொழியப்பட்ட ரயில் பாதையில் வளைவுகள் அமைப்பதால் ஏற்படும் போக்குவரத்து நெரிசலை சமாளிப்பதற்கு KMTT இலிருந்து அல்லது KMTT இற்கு	உடன்படவில்லை. UDA இன் கீழுள்ள SCDP ஆல் ஆரம்பகட்ட அபிவிருத்தி திட்டம் தயாரிக்கப்பட்டது மற்றும் KMTT செயற்திட்டத்தை நிர்மாணிக்கும்	கண்டிக்கான தந்திரோபாய போக்குவரத்து முகாமைத்துவம் மற்றும் போக்குவரத்து சுழற்சி

	பேருந்துகளுக்கு இருவழிப் போக்குவரத்துக்கு பிரத்தியேகமாக வீதிக்கு அடியில் பாலமொன்று தேவை என்பதை பெருந்தெருக்கள் மற்றும் மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சினால் வெளியிடப்பட்ட கண்டிக்கான தந்திரோபாய போக்குவரத்து முகாமை மற்றும் போக்குவரத்து சுழற்சி திட்ட அறிக்கையானது (CBD) அடையாளம் கண்டிருந்த போதிலும் , செயற்திட்டத்தின் ஆரம்ப கட்டத்தில் மேற்கண்ட தேவை அடையாளம் காணப்படவில்லை மற்றும் KMTT நுழைவாயிலில் எதிர்பார்க்கப்படும் போக்குவரத்திற்கு தீர்வு இல்லாமல் கட்டுமானப் பணிகள் தொடங்கப்பட்டன. எனவே, இந்த சூழ்நிலை காரணமாக செயற்திட்ட நோக்கங்கள் திட்டமிடப்பட்டதன் பிரகாரம் அடைந்து கொள்ள முடியாது.	பொறுப்பு எமக்கு வழங்கப்பட்டுள்ளது. இதன் கீழ், சேவை கேபிள்கள் மற்றும் கழிவுநீர் கால்வாய்களில் அதிக நெரிசல் இருப்பதால் முன்மொழியப்பட்ட பாதாள சாக்கடை பாலத்தை நிர்மாணிப்பு செய்ய முடியாது என்பது தெரியவந்தது.	செயற்திட்ட அறிக்கையில் பரிந்துரைக்கப்பட்ட அனைத்து தீர்வுகளின் தாக்கத்தையும் அடையாளம் காண்பதற்கும் போக்குவரத்து தடைகளை கடந்து செல்லவும் பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தர் தேவையான நடவடிக்கையினை எடுத்தல் வேண்டும்.
(ஏ)	பெறுகை வழிகாட்டியின் 8.9.3 ஆம் பந்தியின் இன் பிரகாரம் ரூபா.500 மில்லியனுக்கும் அதிகமான எந்தவொரு பொருள் அல்லது சேவையும் அந்தந்த அமைச்சின் செயலாளரால் கையொப்பமிடப்பட வேண்டும். எவ்வாறாயினும், KMTT இற்கான ரூபா.25,697.87 மில்லியன் பெறுமதியான வடிவமைப்பு மற்றும் நிர்மாணத்திற்கான உடன்படிக்கை ஒப்பந்தம் 2024 பெப்ரவரி 01 அன்று, வீதி அபிவிரத்தி அதிகாரசபையின் தலைவரால் முறையான அங்கீகாரம் இல்லாமல் கைச்சாத்திடப்பட்டிருந்தது.	உடன்படவில்லை. வழமையான ஒரு நடைமுறையாக சபையின் அங்கீகாரத்தின் பேரில் ஒப்பந்தங்களினை நடைமுறைப்படுத்தும் நிறுவனத்தின் தலைவரான RDA இன் தலைவரால் முக்கிய உடன்படிக்கை ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டிருந்தன.	நிர்மாணத்திற்கான ஒப்பந்தம் RDA இனால் கைச்சாத்திடப்பட்டதன் தாக்கத்தினை அடையாளம் காண்பதற்கு விசாரணை ஒன்றினை பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தர் மேற்கொள்ள வேண்டும்.